
உ

ஸ்ரீஅம்மா பகவான் சரணம்




# ஸ்ரீ அம்மா பகவான்

## நன்றி நவிலல் நாள்

## நவம்பர் - 14

**நிகழ்வின் போது 2009.11.14ம் திகதி சனிக்கிழமை, இலங்கை, யாழ்மாவட்டம் சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தில் இடம் பெற்ற அற்புதங்கள்/அதிசயங்கள் பற்றிய வெளியீடு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓம் சச்சிதானந்த பரப்பிரம்மா
புருஷோத்தம பரமாத்மா
ஸ்ரீ பகவதி சமேத
ஸ்ரீ பகவதே நமஹ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ அம்மா பகவானின் நன்றி நவிலல் நாள்

இவ் உலகில் சுவர்ண யுகத்தை ஏற்படுத்துவதற்காக பூமி மீது அவதரித்த மனித அவதார கருணா மூர்த்திகளே ஸ்ரீ அம்மா பகவான். வருடந்தோறும் மார்ச் 7ஆம் திகதியை ஸ்ரீ பகவானின் ஜென்ம தினமாகவும், ஆகஸ்ட் 15 ஆம் திகதியை ஸ்ரீ பகவதி பத்மாவதியம்மாவின் ஜென்ம தினமாகவும் யூன் 9ஆந் திகதியை ஸ்ரீ அம்மா பகவானின் திருக்கல்யாண உற்சவ தினமாகவும் உலகம் பூராகவும் பக்தர்களால் கொண்டாடப்பட்டு வருவது போல் நவம்பர் 14 ஆம் திகதியை நன்றித் திருநாளாகக் கொண்டாடுகின்றனர்.

மனிதர்களை பலதரப்பட்ட துன்பம் துயரங்களில் இருந்து விடுவித்து அவர்களினது சைதன்ய நிலையை உயர்த்தி ஆனந்தமாக வாழ வைப்பதே ஸ்ரீ அம்மா பகவானின் முதன்மையான நோக்கமாகும். எம் மதங்களைச் சேர்ந்தவர்களானாலும் அவ் அவ் மதத்தின் சத்தியத்தை ஸ்ரீ அம்மா பகவான் தங்களது அருளால் அனுபவப்பூர்வமாக உணர வைப்பார்கள். ஓம் சச்சிதானந்த பரம்பிரம்மா புருஷோத்தம பரமாத்மா ஸ்ரீ பகவதி சமேத ஸ்ரீ பகவதே நமஹ என்ற மூல மந்திரத்தை உச்சரிப்பதால் கோடிக்கணக்கான மக்களின் வாழ்வில் ஊகிக்க முடியாத அற்புதங்களும் அதிசயங்களும் நடந்த வண்ணமுள்ளன. ஸ்ரீ அம்மா பகவானின் திருவுருவப் படமான ஸ்ரீ மூர்த்தியில் தெய்வீக சைதன்யம் நிறைந்துள்ளதால் அதனை வழிபட்டு பிரார்த்தனை செய்தால் நம் வேண்டுதல்கள் அனைத்தும் வெற்றியாகும். ஸ்ரீ அம்மா பகவான் அருள் அனுக்கிரகத்தின் மூலம் பெற்றுக் கொண்ட நன்மைகளை இந்நாளில் நினைவு கூர்ந்து நன்றியின் நாளில் எம்மைப் படைத்த கடவுள், பெற்றெடுத்து பிறவியைக் கொடுத்த தாய், தந்தை கணவன், மனைவி உறவினர்கள் சினேகிதர்கள், ஆசிரியர்கள், பெரியோர்கள், முதியோர்கள் எம்மை நாடுபவர்கள் மற்றும் உதவி புரிபவர்கள் அனைவருக்கும் ஏனைய பிரபஞ்சத்தில் உள்ள ஜீவராசிகள் தாவரங்கள் ஆகாயம் நீர் நிலம் காற்று சூரியன் அனைத்திற்கும் எம் இதயத்தில் உள்ள நன்றிகளை தெரிவித்து ஸ்ரீ அம்மா பகவானை மகிழ்ச்சியுறச் செய்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் மாவட்டத்தில் சுழிபுரம் கிராமத்தில் காளுவன் சந்திக்கு சமீபமாக ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தில் வாராந்த சனிக்கிழமைகளில் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை இடம்பெறும் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வின்போது கலந்து கொள்ளும் பக்தர்கள் ஸ்ரீ அம்மா பகவானின் அனுக்கிரகத்தினால் பலதரப்பட்ட வேண்டுதல்களை நிறைவு செய்து வருகின்றனர். இந்நிலையத்தில் ஸ்ரீ அம்மா பகவான் அருளால் பல அற்புதங்கள் நிகழ்ந்துள்ளன.

- 2004ஆம் ஆண்டு முதல் ஸ்ரீ அம்மா பகவான் அருள்கடாட்சம் பெற்றுக் கொண்ட செல்வி சிவவேணிஜி அவரது வலதுகை பெருவிரல் சத்திரசிகிச்சையின் போது செயலற்ற நிலை ஏற்பட்டு கை விரல் அகற்றப்பட வேண்டிய நிலையில் பக்தர்களின் கூட்டுப் பிரார்த்தனை, பாதபூசை நிகழ்வின் பின்னர் செயல் இழந்த கைவிரல் செயல்பட்டமை பாரிய அற்புத நிகழ்வாக அமைந்துள்ளன. தொடர்ந்து அற்புதம் நிறைந்த கைகளினால் ஸ்ரீ அம்மா பகவான் அருள் சக்தியினை பக்தர்கள் பெற்று சுகவாழ்வு, ஆரோக்கிய நிலையை அடைந்து வருகின்றனர். குட்டி "நேமம்" என பக்தர்களால் அழைக்கப்பட்டு வரும் ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தில் பின்வரும் அற்புதங்கள் இடம் பெற்றுள்ளன.
- ஸ்ரீ அம்மா பகவான் ஸ்ரீ மூர்த்தி (திருவுருவப் படத்தில்)யில் இருந்து நெய், அத்தர், வீபூதி, சந்தணம், குங்குமம் போன்ற அபிஷேகப் பொருட்கள் அருளப் பெற்றமை. யாழ் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் இருந்தும் பலநூற்றுக் கணக்கான பக்தர்கள் வந்து பார்வையிட்டு பூசிக் கொண்டமை.
- 9 வயதுச் சிறுமி வாய்பேசும் சக்தியைப் பெற்று பாடசாலைக் கல்வியை மேற்கொண்டு வருகின்றமை.
- பல வருடகாலம் குழந்தைப்பேறு இல்லாது குழந்தைச் செல்வம் கிடைக்கப் பெற்றமை.
- அரச உத்தியோகம், வெளிநாடு, பதவி உயர்வுகள் தொழில், திருமணம், பரீட்சைகளில் சித்தி, உயர்கல்வி, பல்கலைக்கழக அனுமதி, ஆகியவைகள் கிடைக்கப்பெற்றமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* குடும்ப உறவுகள் சீர் பெற்றமை, பிரிந்து வாழ்ந்த கணவன் மனைவி ஒன்றிணைந்தமை, யுத்தப், பாதிப்புக்களில் இருந்து குடும்ப உறவுகள் பாதுகாத்து மீளக் குடியமர்ந்தமை
* தீராத கொடிய நோய்கள் ஆஸ்துமா, புற்றுநோய் வாதம், கிட்னி போன்றவை சுகம் பெற்றமை
* மனக்கவலை, நீங்கப் பெற்று மனநிறைவு மனஅமைதி மனச் சந்தோசம், ஆனந்தம், திருப்திநிலை அடையப் பெற்றமை

அனைத்து மக்களும் நவம்பர் 14ஆம் நாளை அம்மாபகவானின் நன்றி நவிலல் நாளாக நினைவு கூர்ந்து நன்றியினைத் தெரிவித்து பிரார்த்தனை செய்து வழிபடுவோமாக!.

நன்றி

எஸ்.கே.சிவலிங்கம்
ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்
சுழிபுரம்
யாழ் மாவட்டம்
இலங்கை 14.11.2009
T.P 021 – 321 – 7352
0777 651719

## நன்றி நவிலும் நாள்

ஒரு சின்னத் தீவு. அந்தத் தீவில் அனைத்து விதமான குணங்களும் வசித்து வந்தன. அகங்காரம், அன்பு, வெறுப்பு, கருணை, அறிவு முதலிய அனைத்து விதமான குணங்களும் இருந்தன. அந்தத் தீவின் பெயர், “லாண்ட் ஆ.்.ப் எமோஷன்ஸ்” இந்தத் தீவு, சமுத்திரத்தில் திடீரென ஒரு நாள் மூழ்க ஆரம்பித்தது. அங்கிருந்த உணர்ச்சிகள் அனைத்தும் பத்திரமாக ஒரு பிரதேசத்திற்கு குடியேற வேண்டும் என்று தண்டோரா போடப்பட்டது.

அனைத்து குணங்களும் அங்கே இருந்து புறப்பட்டு விடுவதற்கு படகுகளைத் தயார் செய்து கொண்டிருந்தன. “அன்பு” எல்லோரிடமும் சென்று “இத்தனை நாள் இருந்த தீவை விட்டு விட்டு எங்கேயும் சென்று விடாதீர்கள் ஒருவேளை ஏதேனும் மாற்றம் நிகழ்ந்து தீவு மூழ்காமல் இருக்குமோ என்னமோ, கொஞ்சம் பொறுங்கள்” என்று கெஞ்சி மன்றாடியது. யாரும் கேட்டவாறில்லை. குணங்கள் ஒவ்வொன்றும் அந்தத் தீவை விட்டுச் செல்ல ஆரம்பித்தன. தீவை இனி காப்பாற்றவே முடியாது என்ற தருணம் வந்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து குணங்களுக்கும் அவரவர் சொந்தப் படகுகள் இருந்தன. ஆனால் அன்பிற்கு மாத்திரம் படகு எதுவும் இல்லை. அப்போது அது ஆடம்பரம் அருகில் சென்று "எனக்குப் படகு இல்லை. உன்னுடைய படகில் இடம் இருக்கிறதா? நானும் வரலாமா? என்று கேட்டது. படகில் பொன்னும், பொருளும் விலை மதிப்பற்ற இரத்தினக்கற்களும் குப்பை போல் குவிந்திருக்கின்றன. அதோடல்லாமல் என்னோடு சேர்ந்து பேரும் புகழும் வருகின்றன இங்கே உனக்கு இடமில்லை போய்விடு" என்றது ஆடம்பரம். அப்போது அன்பு, துன்பத்திடம் சென்று வேண்டிக்கொண்டது. ஆனால் துன்பம் சித்தமாக இல்லை. "நான் தனிமையில் அழ விரும்புகின்றேன். நீ வந்தால் எனக்கு சிரமம்" என்று கூறிச் சென்று விட்டது. பின்பு அன்பு அழகிடம் சென்று கேட்டுக் கொண்டது. அழகோ "ஐயோ நீ எவ்வளவு அழுக்காக இருக்கிறாய். நீ என் பக்கத்தில் வருவதைப் பார்ததால் எனக்கும் அழுக்கு ஒட்டிக் கொள்வதோடு மட்டுமல்லாமல் பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள்" என்று ஒதுங்கிக் கொண்டது. இவ்வாறு ஒவ்வொரு குணமும் ஒவ்வொரு காரணத்தைச் சொல்லி ஒதுங்கிக் கொண்டன.

அன்பு செய்வதறியாமல் திகைத்திருந்த போது ஒரு முதியவர், "வா உன்னை நான் அழைத்துச் செல்கின்றேன்" என்றார். "அன்பு" அந்த முதியவருக்கு மனமார்ந்த நன்றி சொல்லிப் படகில் அமர்ந்து கொண்டது. படகும் எதிர்க்கரையை சேர்ந்து விட்டது. அன்பு படகை விட்டிறங்கியதும் அதன் நன்றியை கூட ஏற்றுக் கொள்ளாமல் சென்று கொண்டிருந்தார். அந்த முதியவர்.

ஆம் அன்பின் பெருமையைக் காலமே நமக்கு உணர்த்த வேண்டும். பணம், பேர், புகழ், துன்பம் இவையெல்லாம் நம் வாழ்க்கையில் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டே இருக்கும். இவை இருக்கின்றன என்று உறவு முறைகளில் அன்பை மறந்து விட்டால்... அந்த உறவுகளில் ஒரு நன்றியுணர்ச்சி இல்லையென்றால், நாம் எவ்வளவுதான் வெற்றிகளை அள்ளி குவித்தாலும் அவையெல்லாம் வெறும் பூஜ்யங்கள் தானே?

ஆன்மீகத்தில் வளர்ச்சி அடைவது என்றாலும், இறைவனை நெருங்க வேண்டுமென்றாலும் மனிதனுக்கு இருக்க வேண்டிய முதல்குணம் நன்றியுணர்ச்சியே. அதனால்தான் பகவத் தர்மத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தர்கள் கொண்டாடும் பண்டிகைகளில் "நன்றி நவிலும் நாள்" ஒரு அதிமுக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. இது நவம்பர் பதினான்காம் தேதி கொண்டாடப்படுகின்றது.

அனைவருக்கும் நம் இதயத்தில் இருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள இது ஓர் அரிய வாய்ப்பு. மனிதன் ஒரு சமூகஜீவி. பிறந்த மறுநிமிடத்திலிருந்து கடைசி மூச்சை வெளியேற்றும் வரை சில ஆயிரம் மக்களின் உதவியைப் பெற்றே வாழ்கின்றான். அவனும் கூட எத்தனையோ பேருக்கு தன் உதவியை நல்குகின்றான். ஆனால் மனிதனின் மனோதத்துவம் தான் செய்யும் உதவிகளை நினைவில் வைத்துக் கொள்ளுமே தவிர மற்றவர்களிடம் இருந்து தான் பெற்றுவரும் உதவிகளை மட்டும் மிக எளிதாக மறந்து விடும்.

பத்து மாதங்கள் கர்ப்பத்தில் சுமந்து பெற்றதாய் எவ்வளவோ வேதனைகள் அனுபவித்து நம்மை ஈன்றிருக்கின்றாள். நம்மை வளர்த்து ஆளாக்குவதற்காக, தன் சுகங்களைத் துறந்து, தன் அத்தியாவசியத் தேவைகளைக் கூட மறந்து எத்தனையோ தியாகங்களைச் செய்து பிரதிநிமிடமும் நம் கோரிக்கைகளை நிறைவேற்றவே நம் பெற்றோர் முயல்கின்றனர். அவர்களின் பால் நன்றியுணர்ச்சி நமக்கு இல்லை என்றால் அது குருட்டு வாழ்க்கை போன்றதல்லவா?

இப்போது நாம் ஒரு மனிதனாகக் கௌரவ வாழ்வு வாழ்ந்து கொண்டிருப்பது நாம் பட்ட கஷ்டங்களால் நமக்கு கிடைத்தது அல்ல. பெற்றோர், சகோதரர்கள், நண்பர்கள் கல்வி பிரசாதித்து குருஸ்தானத்தில் உள்ள ஆசிரியர்கள் முதலியவர்கள் அனைவரும் நமக்கு உதவியுள்ளனர். சிலர் நாம் அறியாமலேயே செய்து கொண்ருக்கின்றனர். இன்னும் சொன்னால் ஓர் அற்புத சக்தி வாய்ந்த, கண்ணுக்குத் தெரியாத கைகள், அன்புடன் நம் வாழ்க்கையைக் காத்தருளி வழி நடத்துகின்றது என்ற உண்மையை நம் அஞ்ஞானத்தால் தெரிந்து கொள்ள முடியாமலேயே காலத்தைக் கடத்தி விடுகின்றோம். அந்தத் தெய்வீகக் கரங்கள் மூலம் நமக்கு கிட்டியதே நமது அத்தனை உறவு முறைகளும் அக்கரத்தையே உணராத நமக்கு நன்றியுணர்ச்சி ஏற்படும்.

கடும் பணப்பிரச்சனையால் தடுமாறிக் கொண்டிருந்த ஒரு பெண் அம்மாவின் பாத தரிசனத்திற்காக வந்திருந்தார்கள். அம்மாவிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் கஸ்டங்களைச் சொல்ல வேண்டும் என்றும். அவற்றிலிருந்து தன்னை வெளியே கொண்டு வர வேண்டும் என்று பிரார்த்திக்கலாம் என்று எண்ணிக் கொண்டார். ஆனால் அம்மாவின் பாதங்களை ஸ்பரிசித்த உடனேயே "அம்மா எனக்கு மாங்கல்ய பலத்தைக் கொடுத்து நித்திய சுமங்கலியாய் வாழ வையுங்கள். அவர் நினைத்தும் பார்த்திராத வார்த்தைகள அம்மாவிடம் பேசினார். அம்மாவும் ஆசீர்வதித்தார். வெளியில் வந்தவுடன் "ஐயோ அம்மாவிடம் என் கஸ்டங்களைச் சொல்லிக் கொள்ளாமல் எவ்வளவு முட்டாள்தனமான ஒரு பிரார்தனையை செய்துவிட்டு வந்திருக்கின்றேன்." என்று தன்னைத்தானே நொந்து கொண்டார்.

பணப்பிரச்சனை அதிகரித்துக் கொண்டே வந்ததினால் அவர் கணவன் அனுதினமும் அவரோடு சண்டை போட்டார். பிரிந்து விடலாம் என்று தொல்லை செய்தார். "அம்மாவின் தரிசனத்திற்கு சென்று வந்திருக்கின்றோம். இல்லையா? இனி அம்மா நமக்கு அனைத்தையும் சரி செய்வார்" என்று தன் கணவனுக்கு தைரியம் சொல்லுவார் அந்தப் பெண்மணி. இரண்டு மாதங்கள் கழிந்தன. ஒருநாள் அவர் சமையலறையில் வேலையெல்லாம் முடித்துக் கொண்டு வருவதற்குள் அவர் கணவன் மின்விசிறியில் தூக்கு மாட்டிக் கொண்டு தொங்கியிருந்தார். கண்கள் நிலைகுத்தி நாக்கு வெளியில் தள்ளி இருந்தது. அவரின் அலறலைக்கேட்டு அக்கம் பக்கத்தினர் எல்லோரும் ஓடிவந்து உடலைக் கீழிறக்கினர். அவர் இறந்து போய் பல நிமிடங்கள் கழிந்திருந்தது. என்ன செய்வதென்று அறியாமல் மனம்கலங்கிய நிலையில் பூசை அறைக்குச் சென்று அம்மாவைப் பிரார்த்தனை செய்தார் அவர். நாமஜபம் செய்தவாறு தன் மாங்கல்யத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று மன்றாடினார். சிறிது நேரத்திற்கு பின் இறந்த கணவன் எழுந்து உட்கார்ந்து விட்டார். "நீ கும்பிடும் அம்மா பகவானே என் கணவனுக்கு திரும்பவும் உயியுள்ளனர்" என்று கூடியிருந்தவர் அனைவரும் கூட நம் அம்மா பகவானுக்கு கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டனர்.

அவருக்கு எது அவசியம் என்று தெரிந்து கொண்டு அதன்படியே அனுக்கிரஹம் தந்தது மட்டுமல்லாமல், பிரார்த்தனையைக் கூட அவர் மூலமே செய்ய வைத்த அம்மாவின் கருணையுள்ளத்தை நினைத்து அவரால் ஆனந்தக் கண்ணீர் மட்டுமே வடிக்க முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம் வாழ்க்கைப் பயணத்தை அணுவணுவும் நடத்தி வைப்பது அந்தத் தெய்வமே என்று அறிந்து உணர்ந்து நினைவில் கொள்பவனே மஹாபக்தன். அந்த சத்யம் தெரிந்தவுடன் எந்த பக்தனாலும் மௌனமாகச் சும்மாயிருக்க முடியாது. அந்த நாவால் பகவான் நாமத்தை உச்சரிக்காமல் இருக்க முடியாது. அதனாலேயே தியாகராஜர், அன்னமய்யா ஆண்டாள் இவர்களுள் இருந்து வெளிப்பட்ட பாசுரங்கள் இன்னும் நம்மை மெய்மறக்க வைக்கின்றன.

எவ்வளவுக்கெவ்வளவு நாம் அடைந்தவற்றிற்கு நன்றி தெரிவித்திருக்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு அம்மா பகவானுக்கு நாம் நெருக்கமாவோம். ஆகவே "நன்றி"யின் நாளில் நாம் அனைவருக்கும் நன்றி தெரிவித்து அம்மா பகவானை மனம் குளிர வைப்போம்.

(நன்றி அந்தர்யாமின் -1 )

## ஆடுக ஊஞ்சல்

ஆடுக ஊஞ்சல் ஆடுகவே
அம்மா பகவான் ஆடுகவே
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே
சத்திய லோகவாசா ஆடுகவே........(2)

கலியுகம் காக்கும் பகவானே
மனக்குறை எல்லாம் தீர்த்திடுவாய்
உள்ளத்தில் நினைத்ததை அத்தனையும்
போக்கிடுவாய் எம்மைக் காத்தருள்வாய் .....(ஆடுக ஊஞ்சல்)

அம்மா உன்னை அடி பணிந்தேன்
அனைத்தும் நீதான் என்று வந் தேன்
உன் கடைக்கண்ணால் என்னைப் பார்த்திடுவாய்
காலம் முழுவதும் துணை இருப்பாய்
(ஆடுக ஊஞ்சல்)

உள்ளத்தில் கோயில் உனக்கமைத்தேன்
உந்தன் அடிமை அம்மாவே
உன்ஆலயம் அங்கே அமைத்திடவே
பெருகட்டும் உந்தன் பேரருளே (ஆடுக ஊஞ்சல்)

அம்மா தாயே உனை வேண்டி
அழைத்திடு எங்களைத் தாலாட்டி
அன்புடன் ஞானப் பாலூட்டி
அகத்தின் இருளைப் போக்கிடுவாய் (ஆடுக ஊஞ்சல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புல்லாங்குழல் கொடுத்த............

புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே
எங்கள் புருஷோத்தமன் புகழ் பாடுங்களேன்
வண்டாடும் கங்கை மலர்த் தோட்டங்களே
எங்கள் ஸ்ரீ கல்கி பகவான் புகழ் பாடுங்களேன் (புல்லாங்)

பன்னீர் மழை பொழியும் மேகங்களே எங்கள்
பகவானின் புகழ்பாடி - ஆடுங்களேன்
தென்பொதிகை மலைச்சாரன் ராசங்களே
எங்கள் ஸ்ரீ கல்கி நாமத்தைப் போற்றுங்களேன்

ஓயாமல் அலைபாயும் வெண்திரைகளும்
எங்கள் வெண்புரவி நாயகனின் புகழ்பாடுமே
கொள்ளிடத்துக் கரைவாழும் கொக்கினங்களே எங்கள்
கொற்றவனின் கொடியுயர்த்தி பாடுங்களேன் (புல்லாங்)

நத்தத்தில் பிறந்தவராம் கல்கி பகவான்
எங்கள் நேமத்தில் வளர்ந்தவராம் கல்கி பகவான்
இதயத்தின் உள்ளே வந்து அமர்ந்தவராம்
ஸத்ய லோகத்தில் அருளாட்சி புரிந்தவராம் (2) (புல்லாங்)

நேமத்தில் வாசம் செய்யும் பூங்குயில்களே
எங்கள் பரஞ்சோதி புகழ்பாடி வாருங்களேன்.
கலியுகத்தைக் காக்க வந்தார் கல்கி என்று
இப்புவி முழுவதும் சுற்றிப்பரந்து பாடுங்களேன் (புல்லாங்)

## அம்மண் டே அம்மரா

அம்மண்டே அம்மரா மா அம்மா
மா ஸ்ரீ ஸ்ரீ பகவானுனி தர்ம பத்னி (2)
முள்ளோக லாணேனு பகவானு தோ (2)
முச்சடலு தீர்ச்சுகுண்டு முகிபாலதோ (அம்மண்டே)

கனியின் சனி தெய்வமா மா அம்மா
மன கண்ணுல முந்தே உன்னாதி சூடரம்மா - (2)
சந்தோஷம் சந்தோஷம் சந்தோஷமே
அம்ம தோடி மா ப்ரதுகு சொர்க்க லோகமே (அம்மன்டே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஸ்து லேமி பாஸ்துலேமி அந்தஸ்தேமி
மா அம்ம வுன்னசோட்ட அன்னி உன்னவி சாமி
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமே...(2)
அம்ம சோட்ட மாக்கு எப்புடு வைபோகமே.. (அம்மண்டே)

கருணின்சி காபாடே கல்பவல்லி ....(2)
கஷ்டாலு துக்காலு தீர்ச்சே தல்லி
ஆஹ்லாமம் ஆஹ்லாதம் ஆஹ்லாதமே (2)
பத்மம்மா சரணாலு மாக்கு சரணமே (அம்மண்டே)

அனுராகம் முலிகின்சே ஆதி தேவதா....(2)
மா ஆத்மலோன வசியின் சே பூஜ்யமாதா
அணு அணுவுன நீயுண்டி ஓ அம்மா....(2)
லாவின்சு பாலின்சு மா அம்மா (அம்மண்டே)

## நன்றிகள்

நன்றிகள் தந்தோமே மகிழ்ந்திடுவாய் ஓம் பகவான்
நன்றிகள் தந்தோமே மகிழ்ந்திடுவாய் ஸ்ரீ பகவான்
நன்றிகள் தந்தோமே மகிழ்ந்திடுவாய் ஜெய் பகவான்

கேட்டதெல்லாம் கொடுத்து விட்டாய் உன்னோடென்னை சேர்த்து விட்டாய்
கேட்டதெல்லாம் கொடுத்து விட்டாய் உன்னோடென்னை சேர்த்து விட்டாய்
கேட்டதெல்லாம் கொடுத்து விட்டாய் உன்னோடென்னை சேர்த்து விட்டாய்

கருணைப் பெருங்கடலே உலகத்தினை ஆண்டுவாய்
கருணைப் பெருங்கடலே உலகத்தினை ஆண்டுவாய்
கருணைப் பெருங்கடலே உலகத்தினை ஆண்டுவாய்

எங்களை இணைத்திடுவாய் சத்யலோகம் தந்திடுவாய்
எங்களை இணைத்திடுவாய் சத்யலோகம் தந்திடுவாய்
எங்களை இணைத்திடுவாய் சத்யலோகம் தந்திடுவாய்

பக்தி சக்தி ஜீவன்முக்தி தந்தருள்வாய் ஓம் பகவான்
பக்தி சக்தி ஜீவன்முக்தி தந்தருள்வாய் ஸ்ரீபகவான்
பக்தி சக்தி ஜீவன்முக்தி தந்தருள்வாய் ஜெய்பகவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ பகவத் பாதத்திலே சரணடைந்தோம் ஓம் பகவான்
ஸ்ரீ பகவத் பாதத்திலே சரணடைந்தோம் ஸ்ரீ பகவான்
ஸ்ரீ பகவத் பாதத்திலே சரணடைந்தோம் ஜெய் பகவான்

நன்றிகள் தந்தோமே மகிழ்ந்திடுவாய் ஓம் பகவான்
நன்றிகள் தந்தோமே மகிழ்ந்திடுவாய் ஸ்ரீ பகவான்
நன்றிகள் தந்தோமே மகிழ்ந்திடுவாய் ஜெய் பகவான்

## 14.04.2009 செவ்வாய்க்கிழமை தமிழ் சிங்கள புத்தாண்டு தினத்தன்று ஸ்ரீ அம்மா பகவான் ஸ்ரீ மூர்த்தியில் இருந்து அருளப்பட்ட வீபூதி, சந்தணம், குங்குமம், அத்தர் போன்ற அபிஷேகப் பொருட்களை பார்வையிட்ட பக்தர்களின் இதயத்தில் இருந்து வெளியிடப்பட்ட அற்புத துளிகள்.......

**தங்கராசா தவனேசன் கரவெட்டி**

என் வாழ்நாளில் காணமுடியாத அற்புதக் காட்சியை பார்ப்பதற்காக வடமராட்சியில் இருந்து 15.04.2009 புதன்கிழமை மதியம் 2 மணிக்கு வந்து அம்மா பகவானின் அற்புதத்தை என் கண்களால் உண்மையில் கண்டேன். அவர்கள் எம்மை வரவேற்று அம்மா பகவானின் அருள் அற்புதங்களை எமக்கு வாக்கு மூலமாக தந்தார்கள்.... அது எம்மை அனுக்கிரகம் கிடைக்க பெற்றது.

**சி.மயூரன்**

எவருக்கும் கொடுக்காத அருளை அம்மாபகவான் என்னுடைய கண்களுக்குக் காணும் பாக்கியத்தை கொடுத்தார். 15.04.2009 அன்று ஓர் புதன்கிழமை (புதுவருடத்திற்கு அடுத்தநாள்) நான் சுழிபுரம் ஆன்மீக சற்சங்க நிலையத்தில் இவ்வற்புதத்தைத் தவநேசனுடன் கண்டேன். நாம் அங்கு நின்ற போதும் அம்மா பகவானின் இதயத்திலிருந்து வீபூதி, சந்தணம், குங்குமம் என்பன மிகுந்த வாசனையுடன் வெளிவந்து கொண்டிருந்தது. இது எனது மனதுக்கு இதத்தையும் அமைதியையும் தந்தது. இது உண்மையிலேயே அம்மா பகவானின் அருள்தான்.

**கஜேந்திரன் கணேசப்பிள்ளை**
**சுதுமலை வடக்கு**

கடவுளின் அருள் என்று கேள்விப்பட்டேன். ஆனால் அதை என் இரு கண்களால் கண்ட என் வாழ்க்கையின் முதன் மறக்க முடியாத சம்பவம் இதுவே. அம்மா பகவானின் அருள் கிடைத்த திருப்தியுடன் நான் வீடு செல்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராசா பாரதி, காரைநகர்
அம்மா பகவானின் அருட்கடாட்சத்தை பல தடவைகள் பெற்ற நான் அவருடைய அருட்காட்சியை 15.04.2009 புதன்கிழமை தரிசிக்கும் வாய்ப்பை பெற்றேன்.

ஆறுமுகம் சிவகுமார், இந்துக்கல்லூரி வீதி, பண்டத்தரிப்பு
இறைவனின் அருட்கடாட்சம் பற்றி பலமுறை பத்திரிக்கை, நூல்கள், உரைகள், மூலம் அறிந்திருந்தும் நேரடியான அம்மாபகவானின் அருள்பேறினை குங்குமம் சந்தணம், நெய் ஆகியவற்றினை இன்று 15.04.2008 மாலை 5.48 மணியளவில் கண்டுள்ளேன் இதனால் எனக்கு அவர் அருட்கடாட்சம் கிடைத்துள்ளது. இது எனக்கு இரண்டாவது அற்புதம் ஆகும். 09.04.2009 அன்று பகவானின் திருவுருவப்படம் மூலம் நெய் வந்தது. இது அம்மாபகவானின் அருட்கடாட்சம் மூலம் எனது கடமைகள் சீராக நடைபெறுகின்றது.

ஆறுமுகம் மகேந்திரகுமாரி
என்னுடைய வாழ்க்கையில் தெய்வ அருள் அற்புதம் இரண்டாவது முறையா 15.04.2009 அன்று பார்த்து அம்மா பகவானின் குங்குமப் பிரசாதம் ஐந்து படிக்கட்டுகளிலும் சிந்தப்பட்டுக் காணப்பட்டது. இது என் வாழ்க்கையில் அம்மா பகவானின் அருட்காட்சி ஆகும். எனவே இதைப் பார்த்ததில் அம்மா பகவான் தான் கேட்ட கோரிக்கையை நிறைவேற்றுவார் என்பது நம்பிக்கை அம்மா பகவான் என் குடும்பத்தை ஆசீர்வதிப்பார்

நேசதுரை பிரதாபன், ஆஸ்பத்திரி வீதி, சங்கானை
எனது வாழ்க்கையில் ஒரு திருப்பம், நடைபெற்ற சமயம். அதுதான் அம்மா பகவான் என்னை ஆசீர்வதித்து தன்னுடைய சற்சங்க மண்டபத்திற்கு அழைத்து எனக்கு அற்புதம் வழங்கி நான் நினைத்தவை நடக்குமா என ஏங்கிய பல விடயங்களை சில நாட்களுக்குள் நடைபெற வைத்தனர். அன்றிலிருந்து ஒவ்வொரு அருள், புதுமை, அற்புதம் என பலவற்றை கண்ணூடாக பார்க்கின்றேன். அவற்றில் இங்கு நான் கண்ணூடாக பார்த்து மனம் நிறைந்து உணர்ச்சி வசப்பட்ட இவ் அருள் அனைவருக்கும் கிடைத்து வளத்துடன் வாழ வேண்டும். என விரும்புகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2009.04.16 வியாழக்கிழமை

நா.தவராஜசேகரன் நவாலிதெற்கு

அம்மா பகவான் வீபூதி சந்தணம் குங்குமம் வெளிப்படுத்தி அற்புதம் செய்வதாக கேள்வியுற்று பார்ப்பதற்கு அருள் கிட்டியமைக்கு அம்மா பகவானுக்கு கோடானு கோடி நன்றிகள் எல்லோரும் இன்புற்றிருக்க அருள அம்மா பகவான் ஆசீர்வதிப்பாராக.

பே.ரஞ்சநாதன் வடலியடைப்பு

அம்மா பகவான் சரணம்

அம்மா பகவானின் அற்புதம் மிகவும் ஆச்சரியமாய் உள்ளது. மிகவும் மகிழ்ச்சியாகவும் உள்ளது. அம்மா பகவானுக்கு நன்றிகள் என்று நிறைய பக்தர்களுக்கு அற்புதம் தரவேண்டும் அம்மா பகவானுக்கு நன்றிகள்

மு.முரளிதரன் கோப்பாய்

அம்மா பகவான் சரணம்

இறைவனுடைய குருவடிவத்தைத் தரிசித்ததுடன் வீபூதி சந்தணம், குங்குமப் பிரசாதம் அருளுகின்றமை அம்மா பகவானின் தெய்வீக ஒளிப்பிரவாகத்தை எண்ணி பிரமிக்க வைத்தது.

ந.சிவகுமார், காரைநகர்

விரோதி வருடப்பிறப்பில் தங்களின் அற்புத வெளிப்பாட்டினை காட்டி பக்தர்களை அதிசயத்தில் ஆழ்த்தியுள்ளார்கள். இந்த கலியுகத்தில் கல்வி அதிசயங்களை காட்ட வேண்டும். இன்னல்படும் மக்களை காத்தருள வேண்டும். இந்த அதிசயத்தைக் காட்டியமைக்காக கோடானு கோடி நன்றிகளைத் தெரிவித்து பாதம் சரணடைகின்றோம்.

மயூரா மயில்வாகனம், தாவடி தெற்கு, கொக்குவில்

ஸ்ரீ அம்மா பகவான் சரணம்

நிச்சயமாக இன்றைய நாள் என்னால் மறக்க முடியாது நன்றி அம்மா பகவான் இன்று அம்மா பகவான் அனுக்கிரகம் பூரணமாக எனக்கு கிடைத்ததை என்னால் உணரக் கூடியதாக இருந்தது. ஊஞ்சல் பாட்டு பாடும்போது ஸ்ரீ மூர்த்தி ஊஞ்சல் ஆடிய அந்தக் காட்சி இப்போதும் என் கண்களுக்குள்ளேயே இருக்கிறது. எனது கல்வி, வாழ்க்கை, இலட்சியம், மணவாழ்க்கை எல்லாவற்றையும் அம்மா பகவானே பெற்றோராக இருந்து நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இன்று கிடைத்தது. நிச்சயமாக அம்மா பகவான் என்னை ஆசீர்வதிப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த.பிறேமச்சந்திரன்
உடுவில்

இன்றைய அம்மா பகவான் தரிசனம் எனது மனச்சுமைகளை இறக்கிவைத்தது போன்ற உணர்வினை ஏற்படுத்தியது

அம்மா பகவான் சரணம்
இ.பத்மராணி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்

பகவானின் அனுக்கிரகத்தினால் ஞாயிற்றுகிழமை 2009.04.19 அன்று இச்சற்சங்கத்திற்கு வரக்கிடைத்தமை பெரும்பேறே எமது உள்ளத்தில் அம்மாபகவானை எழுந்தருள வைத்தபோதே நாம் நாமாக இல்லாமல் ஏதோ லோகத்தில் வைத்திருந்து அருட்தீட்சை தந்தது போன்று ஆனந்தம் பிரவாகிக்கின்றது. இப்பாக்கியம் கிடைத்ததையிட்டு அம்மா பகவானுக்கு கோடானு கோடி நமஸ்காரம்
அம்மா பகவான் அனுக்கிரகத்தில் எம்மையெல்லாம் அழைத்தமைக்காக எமது மனமார்ந்த கோடி நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அம்மா பகவான் சரணம்
சுன்னாகம் சற்சங்கம்
6ம் கட்டை கே.கே..எஸ் வீதி
சுன்னாகம்

தீட்சை வாங்கும்போது தலையில் அதிர்வுடன் ஏதோ இறங்குவது போல் இருந்தது. பின் ஒரு பிரகாசமான நீல பொன் ஒளியாக தெரிந்தது உடல் ஓர் இன்ப உணர்வை அனுபவித்தது. அம்மா பகவானுக்கு கோடானு கோடி நன்றிகள்

செல்வி.சா. சரிதா (யாழ்.பல்கலைக்கழகம், நுண்கலைப்பீடம்)
இந்த வருடப்பிறப்பன்று காலையில் நான் மிக்க சந்தோஷமாக இருந்தேன். அன்று மாலை சிவவேணியீ அவர்கள் தொலைபேசியில் கூறிய செய்திமூலம் நான் அடைந்த ஆனந்தத்திற்கு எல்லை இல்லை. உடனேயே சற்சங்கம் வந்து பார்த்தபோது உடலே மெய்சிலிர்க்கும் அளவிற்கு அவர்கள் எம்முன் காட்சி தந்தமை என் வாழ்வில் என்றுமே மறக்க முடியாத ஒரு நிகழ்வு. இந்தப் பிறப்பில் இப்படி ஒரு காட்சி காணக்கூடிய பாக்கியம் தந்த என் அம்மா பகவானிற்கு கோடானு கோடி நன்றிகள் தெரிவிப்பதில் பெருமானந்தம் அடைகின்றேன்.

மிக்க நன்றி அம்மா பகவானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி.க.கஜந்தினி (யாழ் பல்கலைக்கழகம், நுண்கலைப்பீடம்)
இந்த வருடப்பிறப்பு ஆரம்பத்திலே அம்மா பகவான் நிகழ்த்திய ஆனந்த அற்புத அதிசயக் காட்சியை இன்று நான் கண்குளிரக் கண்டு ரசித்ததில் மானிடப்பிறவி எடுத்ததையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அம்மா பகவானின் இந்த அற்புதம் என்னை சொர்க்கத்துக்கே இழுத்துச் செல்கின்றது. இந்தப் புத்தாண்டுப் பிறப்பிலே புதுக்கோலம் அளித்த என் இனிய அம்மா பகவானுக்கு கோடானு கோடி நன்றிகள்.

அம்மா பகவான் சரணம்

18ஆம் திகதி நான் இங்கு வந்தபோது பகவானால் வீபூதி மட்டும், அம்மாவால் குங்குமமும் வந்தது. மறுநாள் வந்து இருந்தேன். பகவானால் சந்தணமும் வந்திருந்தது. இதைப் பார்த்ததும் எனக்கு பெரிய ஒரு அதிர்ச்சியும் சந்தோஷமும் ஏற்பட்டது. மறுநாள் வந்திருந்தேன் பகவானின் உறுப்பு ஒன்றுமே தெரியவில்லை எனக்கு என்றால் பெரிய அதிர்ச்சி ஏற்பட்டது. எனவே இந்தப் பெரிய அற்புதத்தை எங்களுக்கு தந்ததற்கு நான் கோடானு கோடி நன்றி தெரிவிக்கின்றேன்.

ச.சியாமளா, காரைநகர்

நான் இந்த அம்மா பகவான் சற்சங்கத்திற்கு முதல் முதல் வந்தநாள் இன்று. அதில் அம்மா பகவானிடம் நான் மனதில் இருத்திய போதும் அவர்கள் என் கைகளில் இருப்பது போன்று தென்பட்டது. இது மட்டுமல்லாது என்னை நோக்கி அவர்கள் நகர்வதைப் போன்று காணப்பட்டது. இது எனக்கு அவர்கள் தந்த அற்புதங்கள் சிறப்பாக அம்மா பகவானுக்கு நன்றி கூறுகின்றேன்.

அம்மா பகவான் சரணம்

ம.அருளினி

தாவடி

அம்மா பகவானின் பக்தையாகியதே எனது பெரும் பாக்கியம். அவரின் பஜனைகள் கேட்கும் போதே மன அமைதி பல அற்புதங்களை கேட்டதுடன் இன்று திருநீறு, சந்தணம், குங்குமம் போன்ற பிரசாதப் பொருட்கள், திருமேனியிலிருந்து அருள்மழை பெய்தமை என்னை மெய்சிலிர்க்க வைத்ததற்கு அம்மா பகவானுக்கு நன்றி.

அம்மா பகவான் சரணம்

விரோதி வருஷத்தில் நீங்கள் புரிந்திருக்கும் அற்புதத்தினை எனது நண்பிகளுடன் வந்து நேரில் பார்த்து அதிசயித்து வழிபட்டோம். இத்தகைய அதிசயத்தை நிகழ்த்திய உங்களுக்கு கோடானு கோடி நன்றிகள் . இவ்வுலகத்திலுள்ள சகல ஜீவராசிகளுக்கும் உங்கள் கருணை என்றும் கிடைக்க வேண்டும் என இந்நன்நாளில் தங்களை வேண்டி சரணடைகின்றோம்.

நன்றி ப.நிரஞ்சனா பண்ணாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ அம்மா பகவான் சரணம்

தமிழ் சிங்கள புத்தாண்டு தினமாகிய (14.04.2009) அன்று ஸ்ரீ அம்மாபகவான் அபிஷேகப் பொருட்கள் வழங்கியதை இட்டு வெளியிடப்பட்ட பாமாலை

கலியுகம் தன்னில் காத்தருள் புரியும் ஸ்ரீ அம்மா பகவானின் அற்புத அருள் கண்டு நன்றி கூறி பிறவிப்பயனை அடைவோம் வாரீர்

# நித்திய பரிபூரண வாழ்விற்கு அருள் கொடுக்கும் ஸ்ரீ அம்மா பகவான் சரணம்

❖ கலியுகம் தன்னில் பத்மாவதி சமேத ஸ்ரீ கல்கி பகவான் அவதரித்து பக்தர்களை அன்புடனே வழிகாட்டி நின்றனர் வாழி

❖ முக்கண் முதல்வன் சிவனுமாய் மூவுலகாளும் அன்னையுமாய் கீதையை உபதேசித்த கண்ணனுமாய் அன்பை போதித்து கல்கி தர்மத்தை வளர்க்கும் என் கண்களே வாழி

❖ பக்தர்கள் கூடி நாமங்கள் பாடிட பக்தி வெள்ளம் இவ்வாலயம் தன்னில் கரைபுரண்டோட இன்னிசை ஓசையால் இசையுடனே மகிழ்வுற்று உள்ளத்து அன்பால் உகந்தருள் புரிந்து அற்புதம் தந்தாய் அம்மையே அப்பா வாழி

❖ விரோதி வருடமதில் துன்பங்களை தீர்த்திடவே கல்கியாய் அவதரித்து கூப்பிட்ட குரலுக்கு அம்மையுடன் இணைந்து 14.04.2009 அன்று பி.ப 1.30 மணியளவில் நேமத்தில் தானிருந்து இவ்விடம் ஓடி வந்து அம்மா அற்புத பாதந்தனை மிதித்து மங்கல திலகமிட்டுச் சென்று அற்புதம் புரிந்த தாயே அம்மா நீ வாழீ

❖ ஐயனே நீ மட்டும் சும்மாவா விட்டாய்? அன்னை அவள் ஒன்று தர அப்பா நீ விபூதி சந்தணம் நாளும் தந்து எம்மையெல்லாம் அன்புடனே வாழ்த்துகின்றாய் தந்தை நீ வாழீ

❖ எல்லா பக்தரும் இவ்வற்புத அருள்கேட்டு பார்த்திடவே அன்புடன் விரைந்து இவ்விடம் தன்னில் வந்து இம்மகிமை தனைக் கண்டு ஆனந்தப் பரவசத்தில் மயங்கி உங்கள் திருப்பாதங்களில் வீழ்ந்தனர். ஆசிகள் வழங்கி அருளை வாரி வழங்கும் அற்புதப் பெண்மணி ஸ்ரீ வேணிஜீ, புனித தீர்த்தம் தெளித்திடவே அருள்பெற்று எழுந்திட அற்புதம் புரிவீர் வாழீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ ஈழமணித் திருநாட்டில் பக்தியின் மேன்மை இவ்வாலயம் தன்னில் பெருகிட எங்கும் இன்புகழ் பாடும் சந்நிதி பக்தர்களை இவ்விடம்தனை அழைத்து உனது அற்புதம் காட்டி மகிமை கொடுத்தீர். இவற்றோடு இன்னும் பல பல அற்புத லீலைகள் செய்து எல்லோரையும் வாழ்த்திடுவீர் வாழீ

❖ கண்பார்வை அற்ற பெண்ணவளை உன்னிடத்தில் அழைத்து உன்மகிமை தனை காட்டி மகிழ வைத்தாய் ஐயனே


❖ வாய்பேசா தங்கை அவளை வாய்பேச வைத்து பள்ளிக்கு அனுப்பி பலருடன் கதைபேசி மகிழ வைத்தாய் அம்மையே நீவிர் சூரிய, சந்திரராய் ஒளி கொடுத்து வாழ்த்திடுவீர் வாழீ

❖ எத்தனை பாவங்கள் செய்தேனோ? அத்தனையும் போக்கிடவே எங்களை சத்தியலோகத்தில் சேர்ப்பாயே. இத்தனை நாளும் எங்களுக்கு அளித்த அற்புதங்களுக்கு கோடி கோடி நன்றிகள்

2009.04.25ம் திகதி மாலை சனிக்கிழமை சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தில் இடம்பெற்ற கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வின் போது மூளாயை வசிப்பிடமாகக் கொண்ட திரு.கி.கணநாதன் அவர்களினால் ஆக்கம் செய்யப்பட்டு சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப்பிரார்த்தனை மையப்பக்தர்களினால் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான்சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தில் 14.04.2009 தமிழ் சிங்கள புத்தாண்டு தினத்தன்று ஸ்ரீ அம்மா பகவான் ஸ்ரீ மூர்த்தியில் இருந்து அற்புதமாக அருளப்பட்ட குங்குமம், சந்தணம், வீபூதி அத்தர் போன்ற அபிஷேகப் பொருட்கள் சொரிந்த காட்சி



ஸ்ரீ அம்மா பகவான் அற்புதமாக அருளப்பட்ட அபிஷேகப் பொருட்களுடன் செல்வி.சிவவேணிஜி யாழ்மாவட்டத்தில் பல பாகங்களிலும் இருந்து வந்து அம்மா பகவானின் அற்புத காட்சியை பார்வையிட்டு அருட்தீட்சை பெற்றுக் கொண்டவர்களுக்கு நன்றியுரை கூறும் காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீஅம்மா பகவான் சரணம்



# நன்றிகள்

இலங்கை யாழ் மாவட்டம் சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தில் இடம்பெற்று வரும் கூட்டுப் பிரார்த்தனை மையத்திற்கு வருகை தந்து கலந்து கொண்ட பக்தர்களுக்கும், பாதபூசைகள், கலசபூசைகள், ரோகினி, சதய நட்சத்திர நாட்களில் பாதபூசைகளை பொறுப்பேற்று நடாத்தி வந்த பக்தர்களுக்கும், மலர்மாலைகள் அபிஷேக வீபூதி, சந்தணம், குங்குமம், ஊதுபத்திகள், பூக்கள், பிரசாதங்கள், சிற்றுண்டிகள், இனிப்புகள் போன்றவைகளை ஸ்ரீ அம்மா பகவானுக்கு நல்கியவர்களுக்கும், சனிக்கிழமைகளில் இடம்பெற்று வரும் பஜனை நிகழ்வின் போது பூசைகளைப் பொறுப்பேற்று நடாத்தி வந்தவர்களுக்கும் ஸ்ரீ அம்மாபகவானின் வைபக நிகழ்வுகளுக்கும் சகல வழிகளிலும் பங்கு கொண்டு உதவி நல்கிய பக்தர்களுக்கும் படப்பிடிப்பு வீடியோ கதிரைகள், பந்தல் அமைத்தல், ஒலிஅமைப்பு, ஆன்மீக உரைகள் நிகழ்த்தியவர்களுக்கும், பொது நிகழ்விற்காக மண்டப வசதியினை ஏற்படுத்தி உதவி புரிந்த சிவபூமி முதியோர் இல்ல நிர்வாகிகளுக்கும், தமிழ், சிங்கள புத்தாண்டு தினத்தில் வீபூதி, சந்தணம், குங்குமம் போன்ற அபிஷேகப் பொருட்கள் அருளியமையை பார்வையிட வந்த யாழ் மாவட்டத்தில் பல இடங்களில் இயங்கி வரும் ஸ்ரீ அம்மாபகவானின் சற்சங்கத்தின் நிர்வாகிகள், பக்தர்கள் அரச, கூட்டுத்தாபன ஊழியர்கள் பொது அமைப்புக்களின் உறுப்பினர்கள், பொதுமக்கள் ஆகியோருக்கும் வெளிநாடுகளில் இருந்து தொலைபேசி மூலம் ஆசிச் செய்தி அனுப்பியவர்களுக்கும் தொலைபேசி மூலம் கலச பூசைகளை மேற்கொண்டு பங்களிப்புச் செய்தவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆசிச் செய்திகளை தெரிவித்துக் கொண்ட யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் உயர்திரு.கே.கணேஷ் அவர்களுக்கும், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் திரு.R.T ஜெயசீலன் அவர்களுக்கும் இடம்பெற்ற அற்புத நிகழ்வுகள் பற்றி இதயபூர்வமாக சிந்தனைத்துளிகளை நல்கியவர்களுக்கும் ஸ்ரீ அம்மா பகவானின் அனுக்கிரகத்தினால் கவரப்பட்டு வருகை தந்த ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கும் ஸ்ரீ அம்மா பகவானின் நிகழ்வுகள் பற்றிய செய்திகளை வெளியிட்டு வந்த வலம்புரி, உதயன் பத்திரிகை நிறுவனத்தினருக்கும், பாமாலை, தோத்திரம் ஆக்கம் செய்து வெளியீடு செய்தவர்களுக்கும், சுழிபுரம் ஸ்ரீ அம்மாபகவான் சற்சங்க எல்லா பக்தர்களுக்கும் பஜனை நிகழ்வில் மிருதங்கம் இசைக்கருவிகள் மூலம் நிகழ்வுகளை சிறப்பித்து வரும் பக்தர்களுக்கும் இவ் நன்றி நவிலல் நாள் வெளியீட்டு மலரினை மிக மிக குறுகிய மணி நேரத்தில் சிரமம் பாராது அச்சிட்டு தந்த தொல்புரம் வழக்கம்பரை ஸ்ரீ விநாயகர் அச்சக நிறுவனத்தினருக்கும் எங்களின் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்து எல்லோர்களின் சைதன்ய நிலையை உயர்த்தி என்றும் ஆனந்தம், சந்தோஷம் ஆரோக்கியமாக வாழ்வதற்கு ஸ்ரீ அம்மா பகவான் அனுக்கிரஹம் வழங்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்..

நன்றி.... நன்றி..... நன்றி...


சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையம்
யாழ் மாவட்டம், இலங்கை
T.P 021 – 321 – 7352
0777 651719 - 077 1242784

செல்வி.சி.சிவவேணிஜி
எஸ்.கே.சிவலிங்கம்ஜி


ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்கம் சிவ-மங்கள இல்லம் Tel No:060-221-7352


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org